Chapter XXIII Code of Criminal Procedure.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, TIRUNELVELI

CC 440/2022

Deposition of witness for : PW 2

| | | | |
|---|---|---|---|
| Name : | பிரேமா | Caste : | |
| Father's/ Husband's Name : | சுடலைகண்ணு | Calling : | |
| Village : | | Religion : | |
| Taluk : | | Age : | 35 |

**Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) in the day of 16.08.2023.**

**(Accused absent.)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தாதனூத்தில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது தங்கை. அசா1 க்கும் அவளுக்கும் ஏற்கனவே குடும்பபிரச்சனை ஏற்பட்டிருந்த நிலையில் மகளிர் காவல் நிலையத்திற்கு சென்றாள். அதன்பின் பிரச்சனை முற்றி போய் அசா1 எனது அம்மா வீட்டிலே தங்கி இருந்தாள். மகளிர் காவல் நிலையடத்தில் தனியே வீடு எடுத்து தங்கி இருக்குமாறு அறிவிறுத்தினார்கள். கொரோனா சமயத்தில் அவரது கணவர் வெளியே தங்கி வேலை செய்தார். பின்பு வேலை இல்லாததால் பிராஞ்சேரிக்கே வந்தார். ஒழுங்காக இருப்பேன் என்றதால் பிராஞ்சேரி செல்வதற்கு அசா1 ஒப்பு கொண்டார. ஆனால் அவள் கண்வர் குடித்து விட்டு வருவார். கரண்ட் மற்றும் பேன் பயன்படுத்த கூடாது என்று மாமியாரும் கொழுந்தனாரும் சொல்லிகொண்டே இருந்தனர்.

பிரச்சனை தொடர்ந்து வருவதால் நிலையம் சென்று வந்து கொண்டிருந்தார். விசாரணை நடத்தி நிலையத்தில் திருப்பி அனுப்பி வைத்தார்கள். வேலைக்கு சென்று திரும்பி வீட்டிற்கு வருவதை அசா1 அவரது கணவரிடம் கூறினார். அன்றைய தினம் கணவரும் பஸ்ஸ்டாப்பிற்கு வந்தார். பஸ் ஸ்டாப்பில் இறங்கிய உடன் ஆள் காணவில்லை என்பதால் சுற்றி பார்த்த போது ரோட்டில் ஒருவர் படுத்திருந்தார். எழுப்பி பார்த்தும் அவர் எழவில்லை. பின் அவள் காட்டு வழி பாதை மூலம் நடந்து வீட்டிற்கு சென்றுவிட்டாள். மறுநாள் காலை **16.07.2021** ம் தேதி தனது கணவரிடம் நேற்று நடந்ததை கேட்ட போது அவள் கணவர் அடிக்க வந்துள்ளார்.

சண்டை முற்றியவுடன் எதிரிகள் **2 .3** ம் சேர்ந்து அசா1 ஐ முடியை பிடித்து அடிக்க ஆரம்பித்தனர். மேற்படி தகவலை எனக்கு போன்மூலம் அசா **1** தெரிவித்தார்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL040049982022/truecopy/order-1.pdf

குரல் ஒருமாதிரி தெரிந்தவுடன் என்னவென்று கேட்டபோது நான் என் அத்தை பயன்படுத்தும் மாத்திரையை போட்டு கொண்டேன் என்று கூறினார். உடனே நான் ஹைகிரவுண்ட் மருத்துவமனை வருமாறு சொன்னேன். பின் கங்கைகொண்டான் போலீசார் அங்கு வந்து சிகிச்சையில் இருந்தபோது அசா1 ஐ விசாரித்தனர். 4 நாட்கள் கழித்து மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்தனர். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**கற்றறிருந்த வழக்கறிஞர் இன்று குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துக் கொண்டார்.**

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL040049982022/truecopy/order-1.pdf

Chapter XXIII Code of Criminal Procedure.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, TIRUNELVELI

CC 440/2022

Deposition of witness for : PW 1

| | | | |
|---|---|---|---|
| Name : | சுமதி | Caste : | |
| Father's/ Husband's Name : | இசக்கி முத்து | Calling : | |
| Village : | | Religion : | |
| Taluk : | | Age : | 30 |

**Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) in the day of 16.08.2023.**

**(Accused absent.)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தாதனுத்து குடியிருந்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். எதிரி சமுத்திரபாண்டி எனது கணவர். எதிரி முருகம்மாள் எனது மாமியார். சதிஸ் எனது கொழுந்தனார். எனக்கு திருமணம் ஆனது **16.06.2018** ம் வருடம். திருமணத்திற்கு முன்பிருந்தே நான் கங்கைகொண்டானில் போஸ் கம்பெனியில் ஆப்ரேட்டராக வேலை செய்தேன். எனது கணவர் வேறு வேறு ஊர்களில் தங்கி வேலை பார்த்து வந்ததாலும் நான் வேலைக்கு செல்வதற்காக நான் எனது அம்மாவின் வீட்டில் தங்கிஇருந்தேன். **2019** ம் ஆண்டு எனக்கு மகன் பிறந்தான். கொரோனா சமயத்தில் எனது கணவர்த அவரது வீட்டிற்கு அழைத்து சென்று விட்டார். நான் அங்கிருந்து வேலைக்கு செல்லும் சூழ்நிலை ஏற்பட்டது. ஊருக்குள் கம்பெனி வாகனம் வராது எனவே **3** கீ.மி. வந்தபிறகு தான் கம்பெனி வாகனத்தில் நான் ஏற முடியும் . எனது கணவர் தான் என்னை கொண்டு விடவும் அழைத்து வரவும் செய்வார்.

அந்த காலங்களிலே எனக்கும் எனது கணவருக்கும் பிரச்சனை வந்து கொண்டிருந்தது. மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன். தனிக்குடித்தனம் போகும்படி அறிவுரை கூறினார்கள். ஆனாலும் அங்கே தான் தொடர்ந்து இருந்தேன். என் கணவர் தொடாந்து தண்ணி அடித்து கொடுத்து தான் இருந்தார். எனக்கும் என் மகனுக்கும் எதுவும் செய்ய மாட்டார்கள். நான் எனது கணவர் வீட்டில் குடியிருப்பதற்கும் பாத் ரூம் உபயோகிப்பதற்கும் கரண்ட் பில் கட்டுவதற்கும் பணம் கொடுக்க வேண்டும் என்று அடிக்கடி எனது மாமியாரும்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL040049982022/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com

கொழுந்தனாரும் என்னை தொந்தரவு செய்வார்கள். **15.07.2021**ம் தேதி **2.00** மணி சிப்ட்க்கு சென்று இரவு **10.30** மணிக்கு சன்னதுபுதுக்குடி பஸ் ஸ்டாப்புக்கு கம்பெனி வேனில் வந்து இறங்கும் போது எனது கணவர் குடித்துவிட்டு படுத்து இருந்தார். அவரை எழுப்பினேன் அவருக்கு எதுவுமே தெரியவில்லை. நான் நடந்தே மேட்டுப்பிராஞ்சேரிக்கு சென்றுவிட்டேன். நான் வந்ததை பார்த்து விட்டு எனது கொழுந்தனார் எனது கணவரை அழைத்து வந்தார்.

பிறகு மறுநாள் காலையில் **8.00** மணியளவில் நான் எனது கணவரை பார்த்து நான் வந்தது கூட தெரியாமல் ஏன் இப்படி குடித்து விட்டு படுத்திருந்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னை பார்த்து தேவிடியா என் அசிங்கமாக பேசினார். மேலும் என்னை கையாலும் கம்பாலும் அடித்தார்கள். என் மாமியார் இந்த தேவிடியா முண்டைய அடிச்சி விரட்டு இந்த வீட்டில் இருக்க கூடாது என்று என் கொழுந்தானாரிடடம் கூறினார்ப. எனது கொழுந்தனார் என்னை வயிற்றிலும் முதுகிலும் முதித்தார். எனது மகனை என்னிடம் இருந்து பிடிங்கி கொண்டார்கள். நான் வீட்டிலியே அழுது கொண்டிருந்தேன். எனது மாமியார் அவரது முதுகுவலிக்காக வாங்கி வைத்து இருந்த **15** மாத்திரைகளை நான் சாப்பிட்டு விட்டேன்.

பின் எனது அக்கா பிரேமாவிற்கு போன் மூலம் பேசினேன். எனக்கு அறிவுரை கூறினார். என்னை ஆட்டோ பிடித்து கைகிரவுண்ட் க்கு வரசொன்னார்கள். நானும் அதன்படி சென்றேன். அங்கு எனது அக்கா சிகிச்சைக்காக சேர்த்தாள். மறுநாள் கங்கைகொண்டான் போலீசார் என்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் எழுதினார்கள். படித்து பார்த்து சரியாக இருந்ததால் நான் கையெப்பம் செய்தேன். நான் அளித்த புகார் வாக்குமூலம் அசாஆ **1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**கற்றறிருந்த வழக்கறிஞர் இன்று குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துக் கொண்டார்.**

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL040049982022/truecopy/order-1.pdf